2016 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அளித்த பதிலிலேயே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியைப் பெற்று, கட்டடம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதை, மீண்டும் ஒரு முறை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

மகளிர் கல்லூரி

***50241—திரு. ப. சிவக்கொழுந்து:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதியில் மகளிர் கல்லூரி மற்றும் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில், கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ஒன்றும், விடுதி ஒன்றும் துவக்குவது பற்றிய கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற பவானி தொகுதியில், அரசுக் கல்லூரி ஒன்றுகூட கிடையாது. பவானிக்கு பக்கத்தில் அரசுக்குச் சொந்தமான விதைப் பண்ணை சுமார் 65 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. விவசாயக் கல்லூரி அமைக்க மிகப் பொருத்தமான இடம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பவானி தொகுதியில் விவசாயக் கல்லூரி அமைக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சிகள் எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியில் விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு நிலம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று ஒரு கேள்வியை கேட்டிருக்கிறார். இந்தக் கேள்வி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டிருக்க வேண்டிய கேள்வி. இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கடந்த நான்காண்டுகளில், விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 3 கல்லூரிகளைத் துவங்கியது. மேலும், பெண்களுக்கென்று ஒரு தோட்டக் கலைக் கல்லூரியைத் தொடங்கிய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

2016 ஜனவரி 23]

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியாக இருந்தாலும், தானே புயலாக இருந்தாலும், சமீபத்தில் பெய்த பெருமழை, வெள்ளம் என மக்களை அச்சுறுத்திய இயற்கைச் சீற்றங்களெல்லாம் அஞ்சி ஓடுகின்ற வகையில், அதன் வேகத்தைவிட இருமடங்கு அதிகமாக வேகம் கொண்டு, மக்களைக் காக்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, செக்கானூரணி, எ. கொக்குளத்தில், அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று திறந்து வைக்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே மாணவர்களுக்கென தனி விடுதி இருக்கிறது; மாணவிகளுக்கு விடுதி இல்லை.

அதேபோல், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி திருமங்கலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டு, 900 மாணவ, மாணவியர் படித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கென தனித் தனியாக மாணவ, மாணவியர் விடுதிகளை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எ. கொக்குளம் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிக்கென மாணவியர் விடுதியும், திருமங்கலம், காமராஜர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியில் மாணவ, மாணவியர் விடுதியும் உருவாக்கித் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, திருமங்கலத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். அங்கே விடுதி ஒன்று வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேலும், செக்கானூரணியில்கூட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டு, தற்போது அங்கே கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே விடுதி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

புதிய திருத்தேர்

***33856—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய திருத்தேர் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தின்கீழ், தினசரி ஒரு கால பூஜை நடைபெற்றுவரும் சிறிய கோயிலாகும். இதன் ஆண்டு வருமானம்